செய்து உடனடியாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிவிட்டு அந்தப் பணியை மேற்கொண்டால்தான் நிரந்தரமாக அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்று அரசு கருதுகிறது. ஆகவே நிதியாதாரத்தை ஒதுக்கியவுடன் இது சம்பந்தமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இராமநாதபுரம் அரண்மனையும் அங்குள்ள ஓவியங்கள், போர்க்கருவிகளும் மாசு படிந்து பழுதடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவார். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கி.பி. 1700-ஆம் ஆண்டு இராமநாதபுரம் சேதுபதி மன்னரால் கட்டப்பட்ட 'ராமலிங்க விலாசம்' எனப்படும் இராமநாதபுரம் அரண்மனை பழுதடைந்திருப்பது குறித்தும், அங்குள்ள ஓவியங்களும், போர்க் கருவிகளும் மாசுபடிந்து பழுதடைந்து வருவதும் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமலிங்க விலாசத்திலுள்ள ஓவியங்கள் மற்றும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஆயுதங்கள் போன்றவைகளை நல்ல நிலையில் பாதுகாப்பதற்காகத் தொல்பொருள் ஆய்வுத்துறை தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது.

இராமலிங்க விலாசம் அரண்மனையைப் பழுது பார்ப்பதற்காகத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் ரூ. 11.20 இலட்சம் அளவுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பெற்று அரசுக்கு அனுப்பட்டது. ரூ. 11.20 இலட்சம் செலவினத் தொகை மிக அதிகமாக இருப்பதினால் இதனை 1996-97, பகுதி-2 திட்டத்தின்கீழ் கொண்டு வருமாறு அரசு அறிவுறுத்தியது. அதன்படி 1996-97 பகுதி இரண்டு திட்டத்தில் கருத்துரு கொண்டு

வருவதற்குத் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், இவ்வரண்மனையில் உள்ள ஓவியங்களைச் சீராக்குவதற்கு லக்னோவில் உள்ள 'இன்டாக்' நிறுவனத்தோடு தொடர்புகொண்டு இவ்வோவியங்களைப் பாதுகாப்பதற்கு ரூ. 12,43,000-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் நடவடிக்கையில் உள்ளது.

மேலும், இவ்வகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சேதுபதி மன்னர்களின் உருவப்படங்களைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கு 'இன்டாக்' நிறுவனம் பெங்களூர் கிளையோடு தொடர்பு கொண்டு அக்கிளைக்கு இங்குள்ள உருவப்படங்கள் 12 எண்கள் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவ்வுருவப்படங்களைச் சீர்செய்ய அவர்களிடமிருந்து ரூ. 44,500-க்கான மதிப்பீடு பெறப்பட்டு அரசின் நடவடிக்கையில் உள்ளது.

அகழ்வைப்பகத்தில் உள்ள சேதுபதி கால ஆயுதங்கள் நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தொல்பொருள் ஆய்வுத்துறை இரசாயனப் பிரிவில் பணியாற்றும் இரசாயனர்களால் அங்குள்ள ஆயுதங்கள் இரசாயனப் பூச்சு பூசப்பட்டு மேலும் கெட்டுவிடாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

* திருமதி கே. மரியம் உல் ஆசியா: தலைவர் அவர்களே, தமிழகத்தின் பண்பாட்டுச் சிறப்புக்கும், சமய நல் இணக்கத்துக்கும் மனித நேயத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய முகவை சேதுபதிகளும், ரகுநாத சேதுபதியின் அன்புக்குரிய அமைச்சர் செத்தும் கொடுத்த வள்ளல் சீதக்காதியும் இணைந்து அமைத்த கலைப் பேழையான வீரத்தின் விளைநிலமான மறவர் சீமையின் மகுடமாக விளங்கும் ராமலிங்க விலாசம் என்கிற ராமநாதபுரம் அரண்மனையில், தமிழும் தெய்வீகமும் தழைத்து வாழ, நீதியும் வீரமும் நிலைக்க சேதுபதிகள் பலர் செங்கோல் பிடித்து ஆட்சி செலுத்திய இந்த வரலாற்று சிறப்புமிக்க அரண்மனையில்தான் புலவர்களும், அறிஞர் பெருமக்களும் கலைவித்தகர்களும் சங்கமமான ஆய்வரங்கமாக-விடுதலைப் போராட்ட வீரர்களின் பாசறையாக-வீரபாண்டிய கட்டபொம்மனை ஜாக்ஸன் சந்தித்த இடமாக–இங்குள்ள ஓவியங்கள் ஓவியக்கலைக்கும், வரலாற்று இயலுக்கும் பெருமை சேர்ப்பதோடு காலத்தையும் வென்று காட்சியளிக்கும் இவ்வளவு ஓவியங்கள் ஓரே இடத்தில் இந்தியாவில் வேறு எங்குமே இல்லை என தொல்பொருள் துறை மேதை டாக்டர் நாகசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நெபுகட் நாசரின் தொங்கும் பூந்தோட்டத்தைப் போல்-சாலமோனின் திராட்சைத் தோட்டத்தைப்போல் பழம்பெரும் இந்தியப் பண்பாட்டின் பெருமைகளை நிலைநாட்டும் அரண்மையாக உலகப் புகழ்பெற்று விளங்கும் இதனை நவீன முறையில் புதுப்பித்து பாதுகாப்பதற்கு இந்த நிதியாண்டிலேயே அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரண்மனையை பழுது சரி செய்வதற்காக தொல்பொருள் ஆய்வுத்துறை 11.2 இலட்சம் அளவுக்கு மதிப்பீடு தயார் செய்து அரசுக்கு அனுப்பியது. இந்தத் தொகை சற்று அதிகமாக இருப்பதால் இந்த ஆண்டிலே எடுக்க முடியாது என்று 1996-97 பகுதி 2 திட்டத்தின்கீழ் கொண்டுவருமாறு அரசு அறிவுறுத்தியிருக்கிறது. அதற்கு ஏற்ப தொல்பொருள் ஆய்வுத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 11.45

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பகையினில் கூற்றம் வரினும் தொலையான்' எனக் கலித் தொகை சிறப்புக் கூறுகின்ற மறவர் குடி மக்களின் வீரத்திற்கும், நேர்மைக்கும், ஆட்சி முறைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய சேதுபதி மன்னரைப்பற்றி மக்கள் விரோத ஆட்சி செய்வதாகவும்; ஊழல் செய்வதாகவும், உண்மைக்குப் புறம்பாக அப்போது ஆங்கிலேய ஏகாதிபத்திய வாதிகளின் தளபதியான மார்டிசன், சுரண்டலுக்கும் ஊழலுக்கும் பெயர்பெற்ற கலெக்டர் ஜாக்சன் ஆகியோர் பொய் உரைகளைப் புனைந்தனர். அதோடு மட்டுமல்ல, அவர்கள் வியாபார சம்பந்தமாக கல்கத்தாவிலுள்ள சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்த வழக்கைச் சந்தித்த ராணி மங்கலேஸ்வரி நாச்சியார் வழக்கில் வெற்றி பெற்றார். கலெக்டரான ஜாக்சனின் பொய் உரைகளை மக்கள் நம்பவில்லை. ஜாக்சனை எதிர்த்து மக்கள் போராடினார்கள். எந்தக் காலக்கட்டத்திலும் வாய்மையே தான் வெல்லும். அதைப்போல கோடிக்கணக்கான மக்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையைப் பெற்ற நாணயமான முதலமைச்சர் என்று பெயர் பெற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அரண்மனையை செப்பனிடுவதற்கு ஏற்பாடுகள் செய்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரண்மனை ஓவியங்களை சீராக்குவதோடு மெருகூட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும்; அரண்மனை வளாகத்தில் நூலகம்

அமைப்பதற்கும்; தொடர்ந்து சான்றோர்களின் ஆய்வரங்கம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஒப்புதலோடு இந்த அரண்மனையின் ஓவியங்களை சீராக்குவதற்காக லக்னோவில் இருக்கிற 'இன்டாக்' நிறுவனத்தோடு தொடர்புகொண்டு இந்த ஓவியங்களைப் பாதுகாப்பதற்காக 12 லட்சத்து 43 ஆயிரம் ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. இந்த அகழ் வைப்பகத்திலே காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிற சேதுபதி மன்னர்களின் உருவப் படங்களைப் புனரமைப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் 'இன்டாக்' நிறுவனம் பெங்களூர் கிளையோடு தொடர்புகொண்டு அந்தக் கிளைக்கு இங்குள்ள உருவப்படங்கள் 12, தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநரால் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த உருவப்படங்களைச் சீர் செய்ய அவர்களிடமிருந்து 44,500 ரூபாய்க்கு மதிப்பீடு பெறப்பட்டு அரசின் நடவடிக்கையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு, பரிசீலிக்கப்படும்.

5. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994-95 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS